Registered No. M. 4018.

உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 6 | December 1944 | No. 12

விஷய சூசிகை. பக்கம்


| | |
|---|---|
| திராவிட வைத்திய சம்மேளனம் கரூர் | 1 |
| திருச்சி ஆயுர்வேதசபை | 1 |
| யோகரத்நாகரம் | 191–196 |



சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—

உள் நாட்டுக்கு ரூ. 2

வெளிநாட்டுக்கு ரூ. 3



விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8

" " ½-க்கு ரூ 4

" " ¼-க்கு ரூ 2



கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

No 2, Police Station West Lane, Madura.



—ரைட்] [விலை 0—3—0

ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—44.

## 12-வது திராவிட வைத்ய சம்மேளனம் கரூர்.

1944ஹூ டிசம்பர்மீ 2, 3 தேதிகளில் ஷெடி சம்மேளனம் கரூரில் முனிசிபல் ஹைஸ்கூல் ஹாலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. வைத்யரத்னம், கேப்டன், ஸ்ரீ ஜி. ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர்கள் (சென்னை கவர்ன்மெண்ட் சுதேச வைத்ய பாடசாலையின் மாஜிபிரின்ஸ்பால்) மேளவாத்தியத்துடன் மிகுந்த உத்ஸாஹத்துடன் வரவேற்கப்பட்டு விசேஷமாக கொடிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட உபன்யாஸ ஹாலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பிரத்யேகமாக அமைக்கப்பட்ட மேடையில் அமர்ந்தபின் சம்மேளனம் ஆரம்பமாயிற்று. பிரதிநிதிகளும் பொதுஜனங்களும் உத்தியோகஸ்தர்களுமாக சுமார் 500 பேர்கள் ஹால் முழுவதும் குழுமியிருந்தனர். சென்னை டாக்டர் A. லக்ஷ்மீபதிகாரு அவர்கள் M. B. C. M., மங்களூர் டாக்டர் சாஸ்திரி சென்னை டாக்டர் C. துவாரகாநாத், பூவாளூர் டாக்டர் சோமசுந்தரம், திருச்சி, வைத்ய வாசஸ்பதி V. B நடராஜ சாஸ்திரிகள், ஸ்ரீரங்கம் டாக்டர் V. சுப்பிரமணியம், மதுரை வைத்யசந்திரிகை ஆசிரியர் பண்டிட் நாராயண அய்யங்கார் முதலியோர் பிரசன்னமாகியிருந்தனர். உபசாரணை சபைத்தலைவர், வைத்யவாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா அவர்கள் தலைமைப்பிரசங்கம் செய்தவுடன் கரூர், ஜில்லா முனிசிப், ஸ்ரீ ஸி. ராஜாபாதர் உடையாளர் அவர்கள் B.A., B.L. வெகு அழகான சொற்பொழிவு நிகழ்த்தி சம்மேளனத்தைத் திறந்து வைத்தவுடன் சம்மேளனத்தலைவர் அவர்கள் தலைமை உபன்யாசம் செய்தார். A. லக்ஷ்மிபதி அவர்கள் B. A, M. B. C. M. மருந்து காக்ஷிசாலையைத்திறந்து வைத்தார் "உரோரோகமும் அதன் சிகித்சையும்", என்ற விஷயத்தை வடமொழியில் எழுதி ஸம்மேளனத்தில் படித்த மதுரை, வைத்திய சந்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு ஓர் தங்கப் பதக்கம் பரிசாக ஸம்மேளனத்தால் அளிக்கப்பட்டது. சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு டிசம்பர்மீ 3ஹ சாயங்காலத்தில் வந்தனோபசாரத்துடன் சம்மேளனம் முடிவுற்றது. ஷெடி தங்க பதக்கம் திருச்சி வைத்ய வாசஸ்பதி V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்களால் போட்டிப்பரிக்ஷைக்காக மண்டலத்தாரிடம் கொடுக்கப்பட்டது.

ஓர் நிருபர்.

திரவியங்களுக்கு எட்டுவித வீரியங்கள் உண்டு. அவ்வீரியங்கள்—தீக்ஷ்ணம், ரூக்ஷம், ஸ்நிக்தம், மிருது, உஷ்ணம், குரு, சீதளம், என்பவை, சிலர் வீரியம் இருவிதமென்கின்றனர், திரவியங்களின் ரஸம், வீர்யம், விபாகம், இவைகளைக் கவனித்து இவைகளுக்குச் சமமான ரஸவீர்ய விபாகமுள்ள திரவியங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும், நாய்த்துளசியின் ரஸத்தால் அயம் முதலிய உலோகங்களை அரைத்துக் கஜபுடமிட அவை பஸ்மமாகும், வாந்தி முதலிய தோஷங்கள் காணப்படா.

இனி வமனம் விரேசனம், நஸ்யம், கர்ணபூரணம், ரக்தஸ்ராவம் ஆக ஐந்து விஷயங்கள் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன. வமனம்—வமனம் என்பது வாந்தியாகும், ஆகாரக்குடலைச் சுத்தப்படுத்தவும் கபரோகங்களிலும் வமன மருந்துகளை உபயோகிக்கவேண்டும், அதன் முறை சொல்லப்படுகிறது. ஐப்பசி, கார்த்திகை, ஆவணி, புரட்டாசி மாதங்களில் வமனம், விரேசனம், இவைகளைச் செய்யலாம், பலமும், தைரியமும், வமனத்தைத் தாங்க தகுதியையும் உடையவர்களுக்கும் கபநோய், ஒக்காளம், இவைகளிலும் வமனம் செய்துவைக்கவேண்டும், மேலும் விஷநோய், மூலைப்பால் ரோகங்கள், அக்னிமந்தம், யானைக்கால், அர்புதம், ஹிருதயநோய் குஷ்டம், அக்கி, பிரமேஹம், அஜீர்ணம், சிறுசிரப்பு, விதாரிகா என்ற நோய், கண்டமாலை, காஸம், சுவாஸம், பீனஸம், கண்டநோய், அபஸ்மாரம், ஜ்வரம், பைத்தியம், ரக்தாதிஸாரம், நாஸாபாகம், தாலுபாகம், ஓஷ்டபாகம், காதுகளில் ஒழுகுதல், அதிஜிஹ்வா, கலசுண்டி, அதிஸாரம், பித்தநோய், கபநோய், மேதோரோகம் அரோசகம், ஆகிய இவைகளில் வமனம்செய்து வைக்கலாம். திமிர நோய், குன்மம, மகோதரம், சரீரம் இளைப்பு, மிகவயதானவன், கர்ப்பிணி, சரீரம் பெருத்தவன், காயமுள்ளவன், தாகாதவன், இளம்வயது, பயந்தவன், ஆகிய இந்நிலைமைகளில் வமனம்செய்து வைக்கக்கூடாது. எட்டு தடவைகள் வமனம் வருமாகில் உத்தமம், அல்லது பித்தநீர்வருமளவு வமனமும் உத்தமம், ஆறுதடவை மத்யமம், நான்குதடவை அதமம், ... மருந்து—திப்பிலி, மருக்காளக்காய், இந்துப்பு இவைகளைப ...

செய்து கபநோய்களில் உஷ்ணஜலத்துடனும், பேப்புடல், ஆடா தோடை, வேப்பம்பட்டை. இந்தப்பொடிகளுடன் சேர்த்து பித்த நோய்களில் குளிர்ந்தஜலத்துடனும், வாதகபநோய்களில்மருக்காளங் காயைப் பாலுடனும், அஜீர்ண நோயில் இந்துப்புடன் சேர்த்து உஷ்ண ஜலத்துடனும் உபயோகிக்க வேண்டும். வேறு நூல்கள் கூறுவதாவது—பேப்புடல், வேம்பு இவைகளின் கஷாயம், அல்லது நெய்யும் இந்துப்பும், அம்லபித்த நோயில்வமனமருந்தாகஉபயோகிக் கலாம், சிரஸ், தொண்டை, ஹிருதயம், இவையின் நேர்மை, அக்னி தீபனம், இலகுத்தன்மை, கபபித்தங்களின் தணிவு, ஆகிய இவை வமனமருந்து உடம்பில் நன்றாகப்பற்றியதற்கு லக்ஷணங்களாம். வமனம்செய்தவன் பகல் மூன்றுமணிக்குமேல் பசியெடுத்த பிறகு பாசிப்பயறு, சம்பா, அறுபதாங்குருவை, மனதிற்கு பிடித்த மாமிச ரஸம், ஆகிய இவைகளால் சித்தமான கஞ்சியைக் குடிக்கவேண்டும். அஜீர்ணம், பச்சை ஜலம், சரீரப்பயிற்சி, ஸ்திரீசங்கம், அப்யங்கம், கோபம், ஆகிய இவைகளை ஒரு நாள் விலக்கவேண்டும். இனி விரே சனம் சொல்லப்படுகிறது. ஸ்நேஹ ஸ்வேதங்களும், வமனமும் செய்தபிறகு நல்ல விரேசன மருந்து உபயோகிக்கவேண்டும். முத லில் வமனம் செய்யாமல் விரேசனத்திற்குக்கொடுத்தால்ஆமாசயத்தி லுள்ள கபம் கீழே இறங்கி கிரஹணியைக் கெடுத்துவிடும். அக்னி மந்தம், சரீரகனம், அல்லது ரக்த சீதபேதி இவைகளை விளைவிக் கும், பாசன மருந்துகளால் அந்த கபத்தைப் பாகப்படுத்த வேண் டும். ஸ்நேஹம் செய்வித்துப் பிறகு வமனமும், ஸ்வேதம் செய்து வைத்து விரேசனமும் கொடுப்பதுமுறையாகும். சித்திரை, வை காசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் விரேசனம் செய்துவைக்க வேண்டும். தீராத நோய்களில் வேறு மாதங்களிலும் விரேசனம் செய்யலாம். பித்தநோய் ஆமநோய், மகோதரம்,வயிற்றுப்பொருமல் இவைகளில் கோஷ்டம் (குடல்) சுத்திக்காக விரேசனம் கொடுக்க வேண்டும். லங்கனம், பாசனம், இம்முறைகளால் விலகும்வியாதி கள் திரும்பிவரக்கூடும், சோதனங்களால் வேறுக்கப்பட்ட நோய் கள் மறுபடியும தலைகாட்டா. விரேசனத்திற்குத் தகுதியற்றவர் களாவன—பாலர், கிழவர், அதிகமாக ஸ்நேஹபானம் செய்தவன், பயந்தவன், விரணமுள்ளவன், களைத்தவன், தாகம் கொண்டவன்,

பருத்த சரீரமுள்ளவன், கர்ப்பிணி. ஜ்வரமுள்ளவன், பிரசவித்தவள், மந்தாக்னி, மதாத்யயம் என்ற நோயுள்ளவன், குண்டுபாய்ந்தவன், பசையற்றவன், ஆகிய இவர்கள் விரேசனத்திற்குத்தகுதியுள்ளவர்களாவன—பழைய காய்ச்சல், விஷபீடை, வாதரக்தம், பவுந்தரம், மூலம், பாண்டு, மகோதரம், கிரந்தி, ஹிருதயரோகம், அரோசகம், யோனி ரோகங்கள், பிரமேஹம், குன்மம், பிலீஹை விரணம், வித்ரதி, வாந்தி, புண்கள், குஷ்டம், காதுநோய், மூக்குநோய், சிரோரோகம், முகரோகம்' ஆசனவாய் ரோகம், லிங்க ரோகம், வீக்கம், கண்நோய், கிருமி, க்ஷாரம், அக்னி, இவைகளால் உண்டாகும் நோய்கள், வலி, மூத்திர அடைப்பு, ஆகிய இவைகள், இனி விரேசன மருந்துகள் சொல்லப்படுகின்றன—(1) ஆமணக்கு எண்ணெயுடன் இருமடங்கு திரிபலை கஷாயம் அல்லது பசுவின்பால் சேர்த்துச சாப்பிட பேதியாகும். (2) சிவதை வெப்பாலையரிசி, திப்பிலி, சுக்கு, திராக்ஷை, தேன், ஆகிய இவைகள் பழைகாலத்திற்கு ஏற்ற விரேசனம். குறிப்பு—சிவதைப்பொடி கால்தோலா, மற்ற நான்கு சரக்குகளும் சேர்ந்து முக்கால் தோலா, இவைகளைப் பொடிசெய்து தேனில் குழைத்துச் சாப்பிடவும், அல்லது நான்கு தோலா திராக்ஷைப்பழத்தை வீசம்படி பச்சைஜலத்தில் போட்டு சிலமணி ஊறவைத்துப்பிறகு கையால் திராக்ஷையைப் பிசைந்து சக்கையைத் தள்ளிவிட்டு அதில் கொஞ்சம் தேன் சேர்த்து முன் சொன்ன அளவுப்படி பொடியைப்போட்டு கலக்கிச் சாப்பிடவும். (3) சிவதை, சிறுகாஞ்சொரி, கோரைக்கிழங்கு, சர்க்கரை, விலாமிச்சவேர், சந்தனம், அதிமதுரம், இவைகளைப் பொடிசெய்து முன்போல திராக்ஷை ரசம் எடுத்து அதில் கலக்கிச் சாப்பிடவும், இது ஐப்பிசி கார்த்திகை மாதங்களுக்கு ஏற்றது. குறிப்பு--சிவதைப் பொடி கால்தோலா, மற்ற ஆறு சரக்குகளும், மொத்தத்தில் முக்கால்தோலா எடுத்துக்கொள்ளவும் (4) திப்பிலி, சுக்கு, இந்துப்பு, விருத்ததாரகம், சிவதை, இவைகளைப் பொடிசெய்து தேனில் குழைத்துச் சாப்பிடவும். மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி இம்மாதங்களுக்கு ஏற்றது. குறிப்பு—சிவதை கால்தோலா, மற்ற நான்கு சரக்குகளும் சேர்ந்து மொத்தத்தில் முக்கால்தோலா எடுத்துக்கொள்ளவும் (5) சிவதை, சர்க்கரை. வகைக்குக் கால்தோலா

எடுத்துத்தண்ணீரில் கலக்கிச்சாப்பிடவும். ஆனி, ஆடி, மாதங்களுக்கு ஏற்றது. வேறு நூல் கூறுவதாவது—வாதரோகத்தில் ஆமணக்கு எண்ணெயும், திராக்ஷை ரஸம், பசும்பால், நெய், நீர், இவைகள் பித்தநோய்களிலும். திரிபலா கஷாயத்தில் வெல்லம் சேர்த்து கபநோய்களிலும், பாலும் கடுக்காயும், திரிதோஷங்களிலும் சிறந்த விரேசனங்கள். வேறு நூல் கூறுவதாவது—திப்பிலி தோலா ஒன்று, தேசாவரம் தோலா இரண்டு, கடுக்காய் தோலா நான்கு, இவைகளைப் பொடிசெய்து ஒரு தோலா பொடியை சுடு நீரில் சாப்பிட விரேசனமாகும். வேறு நூல் கூறுவதாவது—கடுக்காய்தோலா இரண்டு, சிவதை தோலா மூன்று, சுக்கு தோலா இரண்டு, இந்துப்பு தோலா இரண்டு. இவைகளைப்பொடிசெய்து ஒரு தோலா பொடியை வெந்நீரில் கலக்கிச்சாப்பிட சுக விரேசனமாகும். கடுக்காய், இந்துப்பு, திப்பிலி, இவைகளைப் பொடிசெய்து வெந்நீரில் கலக்கிச்சாப்பிட விரேசனமாகும். இதற்கு நாராசகம் எனப்பெயர். 'தேசம்' என்ற விதையை திரிபலை கஷாயத்தில்சிறு நாகப்பூ பொடியுடன் சாப்பிட பேதியாகும். இதற்கு விசித்ர விக்யாதரம் எனப்பெயர். குறிப்பு—தேசம் என்ற விதை [illegible] இல்லை. இனி நேர்வாளவித்து சேர்ந்த விரேசன மருந்துகள் சொல்லப்படுகின்றன. லிங்கம், வெங்காரம், இந்துப்பு, திரிகடு, திரிபலை, சூரியகாந்தி விதை, வாய்விளங்கம், பெருங்காயம், ஓமம், இவை வகைக்குத் தோலா ஒன்று. நேர்வாள வித்து தோலா 6½, இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழ ரசத்தால் அரைத்து மிளகு அளவு வெந்நீர் அநுபானத்தில் கொடுக்கவும். தயிர் அன்னம் பத்தியமாகக்கொள்ளவும். உதரம், பாண்டு, வீக்கம், வீக்கத்துடன் கூடிய மகோதரம், மகோதரம், சகல ஜ்வரங்கள், ஆகிய இவைகளில் கொடுக்கலாம். இதற்கு மேகநாதம் எனப்பெயர். இம் மருந்தை உட்கொண்ட பிறகு தண்ணீரால் கண்களைத் துடைத்துக் கொண்டு, வாசனையை முகர்ந்து, தாம்பூலம் போட்டுக்கொள்ளவும். காற்றில் அலையக்கூடாது, மல மூத்திரங்களை அடக்கக்கூடாது, தூங்கக்கூடாது, குளிர்ந்தநீரைத் தொடக்கூடாது, அவசியமாகில் வெந்நீரைக்குடிக்கவேண்டும், விரேசனம் சாப்பிட்டவர்களுக்கு இந்திரிய பலம், புத்திக்கூர்மை, அக்னிதீபனம், தாதுபலம், ஆயுள்

விருத்தி, ஆகிய இவை உண்டாகும். விரேசனம் சாப்பிட்டவர்கள் காற்றில் அலேதல், குளிர்ந்த நீர், அப்யங்கம். அஜீர்ணம், சரீரப் பயிற்சி, ஸ்திரீசங்கம், இவைகளே விலக்கவேண்டும். சம்பா அரிசி, அருபதாங்குருவையரிசி, பாசிப்பயறு முதலியவைகளால் தயாரிக்கப் பட்ட கஞ்சியை உபயோகிக்க வேண்டும். பேதி அதிகம் போனல் மூர்ச்சை, அடிதள்ளுதல், வலி, கபகோய், ஆகிய இவை யுண்டாகும். மாமிசம் கழுவிய நீர்போலவும், மேதஸ் போலவும், அல்லது ரக்தமாகவும் விரேசிக்கும், இந்நிலைமையில் நோயாளியை குளிர்ந்த நீரால் அல்லது அரிசிகழுவின நீரால் நனைத்து மாமரப்பட்டையை அரைத்து அந்த விழுதால் நாபி பிரதேசத்தில் தடவ பேதி நிற்கும். இனி நஸ்யம் சொல்லப்படுகிறது. சுக்கு வெல்லம் அல்லது இந்துப்பு திப்பிலிகளே ஜலம்விட்டு அரைத்தவிழுது, இவைகளால் நஸ்யம் செய்யலாம். குறிப்பு—முன் சொன்ன சரக்குகளைச் சமயிடை எடுத்து ஜலம்விட்டரைத்து அந்த விழுதை வஸ்திரத்தில் கட்டி திரவத்தை நாசிகளில் பிழியவேண்டும். மூக்குநோய், முகரோகம், கழுத்து நரம்புகள், ஹனுபாகம் அதாவது சாதாரணமாக மோவாய் கட்டை என வழங்கும் பிரதேசம் தோள்பட்டை, ஆகிய இவைகளில் காணும் ரோகங்கள் சிரோரோகம், கண்நோய், தொண்டை நோய், காதுநோய், ஆகிய இவைகளில் நஸ்யம் செய்யலாம். சாப்பிட்டவுடனும் ஸ்நானம் செய்தவுடனும் நஸ்யம் செய்யலாகாது. நஸ்யம் செய்தவுடன் ஸ்நானத்தையும் கோபம் முதலியவைகளையும் விலக்கவேண்டும் இனி கர்ணபூரணம் சொல்லப்படுகிறது. காதுகளில் மருந்துகளைப்போடுவது கர்ணபூரணமெனப்படும். மாமிச ரஸம்முதலியவைகளால் கர்ணபூரணம் செய்யவேண்டும். ஆகாரத்திற்கு முந்தி கர்ணபூரணம் செய்யவேண்டும். தைலம் முதலியவைகளால் கர்ணபூரணம் சூரியாஸ்தத்திற்குப்பிறகுசெய்யப்படவேண்டும். ஒருபக்கமாகசாய்ந்து படுக்கவைத்து நோயாளியின் காதுபாகத்தை முதலில் ஸ்வேதனம்செய்யவேண்டும்பிறகுமூத்திரம்(பசுமுதலியவைகளின்) எண்ணெ, மாமிசம், இவைகளை அல்பச்சூட்டுடன் காதுகளில் விடவேண்டும். நோய்கள் இல்லாமல் ஆரோக்யமுள்ளவன்கர்ணபூரணத்

தை நூறுமாத்திரைகாலமும், காதுநோய்களில் முன்னூறு மாத்திரைகாலமும், சிரோரோகங்களில் முன்னூறு மாத்திரை காலமு வைத்திருக்கவேண்டும், முன் சொன்ன கால அளவுப்படி கர்ணபூரணத்தை அப்படியே வைத்திருக்கவேண்டும். கர்ணபூரணம்செய்து கொள்ளுவதால் அரைச்செவிடு, முழுச்செவிடு, முதலியவை அணுகா. கீழே சொன்ன மாத்திரைகளின் கால அளவு சொல்லப்படுகிறது. வலதுகாலை மடக்கி வலது கையால் முழங்காலைச் சுற்றி ஓர் "சொடக்கு"ப்போடும் கால அளவை மாத்திரை என்பர், இமை கொட்டும் கால அளவை மாத்திரை எனச்சிலர் சொல்லுவார்கள். இனி ரக்தஸ்ருதி அதாவது ரக்தக்குழாயிலிருந்து ரக்தத்தை வெளியேற்றுதல் சொல்லப்படுகிறது. வியாதியில்லாதவன் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் ரக்தஸ்ருதி செய்துகொள்ள வேண்டும். சர்வியாதிகள், கிரந்திகள் முதலியன அணுகா. இந்திர கோபம்என்ற பட்டுப்பூச்சிபோன்ற நிறமுள்ளதும் ஆமணக்கு எண்ணெய் போ தாரை விழாமல் ஜலம்போன்ற தாரையுள்ளதாகவும் இருக்கும் ர மே இயற்கையானது. வீக்கம், எரிச்சல், அவயவவேக்காடு, வ ரக்தப் [illegible]ஷ்டம், கடினமான வாதரோய், கைரோகங்கள், [illegible] கால், வாதம், கிரந்தி, அர்ப்புதம், கண்டமாலை, க்ஷுத்ரரோகங்க ரக்தாபிமந்தம், விதாரி, ஸ்தனரோகங்கள், உடம்பு இளைப்பு, சரீர கனத்தல், கண்ணோய், தந்திரா, சிழ்ப்னிசம், முக எரிச்சல், யக்ருநோய், பிலீஹை, அக்கி, விப்புருதி, புண்கள், காது, உதடு, முகட இவைகளில் காணும், வேக்காடு, எரிச்சல், தலைநோய், உபதம்ச என்ற லிங்கநோய், ரக்தபித்தம், இவைகளில் ரக்தஸ்ருதி செய வேண்டும். பசுவின் கொம்பு, அட்டை, அலாபு, ஆகிய இவைகளால் முறையே வாதபித்த கபநோய்களில் ரக்தத்தை வெளியேற்ற வேண்டும். இரண்டு தோஷங்கள், மூன்று தோஷங்களால் உண்டாகும் நோய்களில் "பதம்" என்ற ஆயுதங்களாலும், ரக்தக்குழாயைக் குத்தியும் ரக்த ஸ்ருதி செய்யவேண்டும். பசுவின் கொம்பால்பத்து அங்குலவரையிலும், அட்டைகளால் ஓர் முழதூரத்திலும், அலாபுவால் 12 அங்குலம் வரையிலும் உள்ள ரக்தமும் [illegible]. பதம் என்பதால் ஓர் அங்குலம்வரையி[illegible]தம், ரக்தக்குழாயைக் குத்துவதால் சர்வாங்க [illegible] ரக்தஸ்ருதி